1980 பிப்ரவரி 11]

அய்யன்குளத்திற்கு வரத்துக் கால்வாய்.

குறுகியகால வினா எண் 2—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருகேயுள்ள வரதமாநதி அணையிலிருந்து அந்த அணைக்கு உட்பட்ட அய்யன்குளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டுவதற்கான கோரிக்கையை அப் பகுதி விவசாயிகள் வற்புறுத்தி வந்ததை அரசு அறியுமா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ): மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து கால்வாய் மூலம் அய்யன்குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது. அய்யன்குளத்திற்கு வந்து சேரும் மழை நீரும், மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து வரத்துக்கால்வாய் மூலம் வந்து சேரும் நீரும், அக்குளத்தை நிரப்பப் போதுமானதாலும் வரதமா நதியிலிருந்து இக் குளத்திற்கு புதிய ஒரு வாய்க்கால் வெட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

விவசாயிகளது கடன்கள்.

குறுகியகால வினா எண் 3—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் கடன்களை ரத்து செய்துவிட்டு, பின்னர் இழப்பீடு கோரிக்கை வைத்தால் அதனை பரிசீலிக்கும் என மத்திய விவசாய அமைச்சர் உறுதி கூறியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த உறுதியின் அடிப்படையில் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) பத்திரிகை செய்தியைத் தவிர, வேறு தகவல் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.